**செய்தி குறிப்பு எண்: 48** **22.5.2008**

**செய்தி வெளியீடு**

பொறியியல் படிப்பிற்கான விண்ணப்பங்களை, சென்னை அண்ணா பல்கலைக்கழகம், 10.5.2008 முதல் விற்பனை செய்யத் தொடங்கியது. மேலும் விண்ணப்பங்களை விற்பதற்கும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அளிப்பதற்கும் கடைசி நாள் 26.5.2008 என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மாநில கல்வித் திட்டத்தில் +2 பயின்ற மாணவர்களுக்கு 21.5.2008 அன்றுதான் மதிப்பெண் பட்டியல் வழங்கப்பட்டதாலும், மத்திய கல்வித் திட்டத்தில் +2 பயின்ற மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள், 21.5.2008 அன்றுதான் வெளியிடப்பட்டதாலும், பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதற்கான தேதியை மேலும் சில நாட்கள் நீட்டிக்க வேண்டும் என்று மாணவர்களும், பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளதைத் தொடர்ந்து, பொறியியல் கல்வி விண்ணப்பங்கள் விநியோகிப்பதற்கும் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அளிப்பதற்குமான காலக்கெடு, 31.5.2008 மாலை 5.00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

**க.பொன்முடி**
**உயர்கல்வித்துறை அமைச்சர்**

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9